**செய்தி வெளியீடு எண்:760** **நாள்: 10.11.2017**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 8.11.2017 அன்று தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், இரகுநாதபுரத்தில் உள்ள அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிக்கு 25 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிர்வாக மற்றும் கல்வியியல் கட்டடங்களை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், இராமநாதபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் 8 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கல்லூரிக் கட்டடங்கள் மற்றும் உடற்பயிற்சி கூடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தமிழகத்தை அறிவுசார் மற்றும் தொழில்நுட்ப கல்வியில் சிறந்த மாநிலமாக உயர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்கிலும், கிராமப்புற மாணவ மாணவிகள் உயர்கல்வி கற்று, வாழ்வில் சிறப்பான நிலையை அடைந்திடும் வகையிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, கிராமப்புற மாணாக்கர்கள் உயர்கல்வி கற்பதற்காக நகரங்களை நாடி செல்ல சிரமப்படாமல், அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே உயர்கல்வி கற்பதற்கு ஏதுவாக கடந்த ஆறரை ஆண்டுகளில் 76 புதிய அரசு கல்லூரிகளை துவக்கியுள்ளதோடு, அரசு கல்லூரிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தியுள்ளது. இதன் மூலம், மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு மாநிலம் 44.3 சதவிகிதத்தைப் பெற்று இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், இரகுநாதபுரத்தில் உள்ள அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிக்கு 25 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்டுள்ள நிர்வாக மற்றும் கல்வியியல் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள நிர்வாக மற்றும் கல்வியியல் கட்டடங்கள் மற்றும் கடலூர் மாவட்டம், சிதம்பரம், அண்ணாமலை பல்கலைக்கழக வளாகத்தில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உடற்பயிற்சி கூடம்;

என மொத்தம் 34 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உயர்கல்வித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.சுனீல் பாலீவால், இ.ஆ.ப., தொழில்நுட்ப கல்வி ஆணையர் (முழு கூடுதல் பொறுப்பு) டாக்டர் ஆர். பழனிசாமி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**